REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✱ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மார்கழி 13உ புதன் (28-12-55) ★ ★ வெளியூர்: மார்கழி 14உ வியாழன் (29-12-55) [இதழ் 168

அறியாமையும் வாக்குரிமையும்!

பிரதமர் ஜவகர்லால் நேரு, குடியரசுத் தலைவர் இராசேந்திரப் பிரசாத் இவர்களை யாரென்றே தெரிந்துகொள்ளாதவர்கள் சோட்டா நாகபுரியில் இருக்கிறார்களாம்!

மேலும், வெள்ளையர்கள் ஏன் இந்தியாவை விட்டு வெளியேறினர் என்றுகூட அவர்களுக்குத் தெரியவில்லையாம்!

இந்தத் தகவலை கயாவில் நடைபெறும் ம. சோ. கட்சி மாநாட்டில் ஜே. பி. கிருபளானி தெரிவித்துவிட்டு, 'இந்தியாவில், நாடு முழுதும் அறியாமை நிலவுகிறது; அதேபோது நாடு முழுதும் வாக்குரிமையும் தரப்பட்டிருக்கிறது; இது மிகவும் விசித்திரமானதாகும்,' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

'காந்தியார் வாரிசுகளிடமிருந்து கடவுள்தான் நாட்டைக் காப்பாற்ற வேண்டும்'

'ஏழ்மையும்-அறியாமையும் நாட்டின் அறைகூவலாகும்'

'காந்தியார் வாழ்ந்ததும்-இறந்ததும் வீண்தானா?'

ம. சோ. கட்சி மாநாட்டில் ஆச்சாரியா கிருபளானி

கயா, டிச. 26—

"இலட்சக்கணக்கான மக்களைப் பற்றியிருக்கும் அறியாமையும் ஏழ்மையும் அகற்றப்படாவிட்டால் சுதந்திரம் அழிந்துவிடும்.

"சுதந்திர இந்தியாவை நோக்கி ஏழ்மையும், அறியாமையும்தான் பெரும் அறைகூவலாக அமைந்துள்ளன; நம்மால் இந்தச் சிக்கலைத் தீர்க்க முடியாது போய்விடுமானால், காந்தியார் வாழ்ந்ததும், இறந்ததும் வீணானவை என்றே நாம் கருதிக்கொள்ள வேண்டியிருக்கும்.

"இந்தச் சிக்கலைத் தவிர்ப்பதற்குரிய வழி எல்லாம், காந்தியாரின் ஆக்கவேலைத் திட்டத்தைப் பின்பற்றுவது ஒன்றுதான்,"

—என்று, ஆண்டுதோறும் நடைபெறும் ம. சோ. கட்சி மாநாட்டின் இந்த ஆண்டுக் கூட்டத்தில் பேசுகையில் ஆச்சாரியா கிருபளானி குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், வேலையில்லாது திண்டாடுவோரின் எண்ணிக்கை 50 இலட்சம் உயர்ந்திருப்பதாக நிதி மந்திரி தேஷ்முக் அவர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்.

"காந்தியார், பலர் ஏராளமான குழந்தைகள் பெறுவதைத் தடுத்தார்; இந்தியாவில் மிக வளமான தொழில் குழந்தை உற்பத்திதான். இத்தத் தொழில் பற்றி, திட்டத்தின் கர்த்தாக்கள் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

"இன்று ஆட்சியிலிருப்பவர்கள், தங்களைக் காந்தியாரின் வாரிசுகள் என்று கூறிக்கொள்வதுடன், தாங்கள் செய்யும் எல்லாக் காரியங்களையும் காந்தியார் பெயரைக் கூறியே செய்கின்றனர்.

"இந்தக் காந்தியாரின் வாரிசுகளிடமிருந்து கடவுள்தான் நம்மைக் காப்பாற்றவேண்டும்.

"காந்தியார் வாழ்க்கையில் கவலை எடுத்துக்கொண்டதெல்லாம், மக்களைப் பற்றியும், அவர்களின் நலன்களைப் பற்றியும்தான்.

"எனவே மக்களின் நலன்களை நாம் ஒருபோதும் புறக்கணித்துவிட முடியாது.

"நாட்டில் நிலவும் ஏழ்மையையும், அறியாமையையும் போக்குவதற்கு நாம் தயாராக இல்லை என்றால், நாம் கட்சி நடத்துவதினால்தான் பலன் என்ன?

"சிக்கலைத் தீர்ப்பதற்கு சர்க்காரைக் குறைகூறுவது மட்டும் போதாது."

நிலப் பிரபுக்கள் கலாட்டா

25 பேர் கைதாயினர்

சர்க்கார் அலுவலகத்துள் புகுந்து தாக்குதல் நடத்தினராம்

ஜெய்ப்பூர், டிச. 26—

இங்குள்ள சிறு நிலப் பிரபுக்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் சர்க்கார் அலுவலகத்திற்குள் புகுந்து கண்ணாடிக் கதவுகளையும், மேஜை-நாற்காலிகளையும் உடைத்தும், சில கிராமங்களின் நிலப் படங்களைக் கிழித்தும், அலுவலகச் சேவகர்களைத் தாக்கியும், பெரும் கலகம் விளைவித்திருக்கின்றனர்.

பின்னர், போலீசார் வந்து நிலைமையைச் சரி செய்தனராம்.

இதை ஒட்டி 25 சிறு நிலப்பிரபுக்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

தங்கள் ஜாகீர்கள் ஒழிக்கப்பட்ட பிறகு தங்களுக்கு நல்ல மறுவாழ்வு தரப்படவேண்டும் என்பது இந்த நிலப்பிரபுக்களின் கோரிக்கைகளுள் ஒன்றாகும்.

கிறிஸ்துமஸ் விழாவில் 500 பேர் பலி

நியூயார்க், டிச. 28—

கிறிஸ்துமஸ் விழா முடிவதற்கு ஒன்பது மணி நேரம்வரை, அந்த விழா நாளில் மட்டும் அமெரிக்கா முழுவதுமாக ஏற்பட்ட சாலை விபத்துக்களில் 500 பேர்வரை கொல்லப்பட்டனர் என்று தெரியவருகிறது.

இதுவரை இத்தனை பெரிய அளவில் விபத்துக்கள் உயிர்ப் பலி கொண்டதில்லையாம்!

24 குழந்தைகள் கொண்ட நவீன குசேலர்!

க்ளீவ்லண்ட் (ஒகியோ) டிச. 25—

"எனக்கு ஏற்கனவே 22 குழந்தைகள் இருப்பதால் இப்போது பிறந்துள்ள இந்த இரண்டு குழந்தைகளையும் காப்பாற்றுவது என்பது என்னால் முடியாது,"

என்று, நான்கு முறை மணந்துகொண்ட 47 வயதான சுப்பெர் என்ற அமெரிக்கத் தொழிலாளி ஒருவர் நீதிமன்றத்தில் கூறினாராம்.

போர்ச்சுகலில் ஒன்பது—ட்ரினிடாடில் நான்கு—அமெரிக்காவில் ஆறு—என்று தனது குழந்தைகள் பற்றிக் கூறிவந்த அவர், தனக்கு 24 குழந்தைகள் உண்டென்று தெரியும் என்றும், ஆனால், எஞ்சியுள்ள மூன்றுபேர் எங்கு இருக்கிறார்கள் என்பது தனக்குத் தெரியவில்லை என்றும் நீதிபதியிடம் அவர் தெரிவித்தாராம்.

அவருக்கு ஓராண்டு சிறைத் தண்டனை விதித்த நீதிபதி, மேலும் அவர், நான்கு, இரண்டு வயதான கடைசிக் குழந்தைகளின் பராமரிப்பிற்காக 80 டாலர் (ரூ 380) தருவதுடன், மாதந்தோறும் 1,000 டாலர் (சுமார் ரூ 4,760) தரவேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

'இலட்சியமே சிறந்தது'

'மந்திரி பதவி பெரிதல்ல'

பதவியினின்றும் பம்பாய்த் துணை அமைச்சர் விலகினார்

மிரட்டிய மொரார்ஜி தேசாயின் முகத்தில் கரி

"பலாத்காரமற்ற ஒரு ஜனநாயக சமுதாயத்தில், நியாயமான எல்லா நோக்கங்களும் கஷ்டநஷ்டங்களை ஏற்றுக்கொண்டு தியாகம் புரிவதின் மூலம்தான் ஈடேற முடியும். நான் பதவியினின்றும் ஒரு நியாயமான நோக்கத்திற்கு விலகிக்கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தது குறித்து மகிழ்கிறேன்; என் கடமையை, என் பங்கினைச் செலுத்த வாய்ப்புக் கிடைத்ததற்காக—என் மனச்சாட்சி செய்த முடிவுப்படி நடக்க வாய்ப்புக் கிடைத்ததற்காக மகிழ்கிறேன்; நான் பதவியினின்றும் விலகுவது, என் இலட்சியம் துரிதமாக ஈடேறத் துணைபுரியும் என நம்புகிறேன்,"

—என்று, பம்பாய் மதுவிலக்குத்துறை துணை அமைச்சர் டாக்டர் டி. ஆர். நரவனே, தமது பதவியினின்றும் விலகும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் சம்யுக்த மராட்டிய இயக்கத்தில் ஈடுபடுவதை நிறுத்தவேண்டும் — அல்லது, பதவியிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும்—என்று, முதன் மந்திரி மொரார்ஜி தேசாயின் மிரட்டல் கடிதத்திற்கு, தனது இராஜினாமாவைப் பதிலாக அனுப்பி வைத்திருக்கிறார்.

அவராகப் பதவியினின்றும் விலகாவிட்டால் பதவியினின்றும் அவர் விலக்கப்படுவார்—என்று, மொரார்ஜி தேசாய் மிரட்டியிருந்தார் — காங்கிரஸ் மேலிடத்தின் ஒப்புதல் பெற்று!

நரவனே, மராட்டியப் பிரதேசக் காங்கிரசின் சம்மதம் பெற்று, மராட்டியரின் இலட்சியத்திற்காகத் தனது மந்திரி பதவியைத் துறந்து விடுவது என்று முடிவு செய்தாராம்.

தனக்கு முதன் மந்திரி இது குறித்து எழுதிய மிரட்டல் கடிதத்தை வெளியிட அனுமதி வேண்டும் என்றும், நரவனே தனது விலகல் கடிதத்தில் கோரியிருக்கிறார்.

மலபாருக்கு நேரு ஏன் சென்றார்?

செறுதுருத்தி, டிச. 26—

பண்டித நேரு மலபாருக்கு ஏன் வருகை தந்திருக்கிறார் தெரியுமா?

மலபார் பிரதேசக் காங்கிரஸ் தலைவரான வாசு மேனனைக் கேளுங்கள்!

"கேரளத்தில் இணைய விரும்பாத மலபார் மாவட்டத்தைக் கேரளத்தில் இணைத்து வாழுமாறு தூண்டவும், 'முஸ்லிம் லீக்' என்ற அசிங்கமான குழந்தையைக் கழுந்தை நெரித்துக் கொல்லவும்தான்—பண்டித நேரு, சொற்பொழிவு நிகழ்த்தும் இந்தச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்,"

என்று, வாசுமேனன் கூறியிருக்கிறார்.

வடநாட்டில் உணவுப் - பொருள் விலையேற்றம்

தடுப்பதற்கு இந்தியப் பேரரசு மேற்கொள்ளும் நடவடிக்கை

மார்க்கெட்டில் கோதுமை விலையைக் குறைப்பதற்காகச் சர்க்காரே பம்பாய், கல்கத்தா நகரங்களில் மணங்கு ரூ. 14 வீதம் கோதுமையைத் தாராளமாக விற்பனை செய்கின்றனர் என்று தெரியவருகிறது.

இதனால் பம்பாயிலும், கல்கத்தாவிலும் தனிப்பட்டவர் கடைகளில் விற்பனை குன்றத் துவங்கிற்று.

ரூ 13 முதல் ரூ 16 வரை ஒரு மணங்கு கோதுமைக்கு விலை வைத்து விற்கப்பட்டது மிக அதிகம் என்று கருதப்பட்டதாலேயே சர்க்கார் இந்த நடவடிக்கையை மேற்கொண்டார்களாம்.

இப்போது சர்க்கார் வசம் 3-இலட்சம் டன் கோதுமை இருப்பதாயும், மேலும் அமெரிக்க உதவி, நேரடி வர்த்தகம் ஆகியவற்றின் மூலம் 3,25,000 டன் கோதுமை வேறு எதிர்பார்க்கப்படுவதாயும், இதனை, மார்க்கெட்டில் கோதுமை விலை இறங்கும் வரையில் சர்க்காரே தாராளமாக விற்பனை செய்வதற்குப் போதுமான கையிருப்பாகக் கொள்ள முடியும் என்றும் கூறப்படுகிறது.

மின்சார விநியோகம்

புதுடில்லி, டிச. 27—

1953-ம் ஆண்டு முதலிருந்து கடந்த மூன்றாண்டுகளில் நாட்டிலுள்ள 8,710 கிராமங்களுக்கு மின்சார விநியோகம் செய்யப்பட்டிருக்கிறதாம்.

சென்னை மாநிலத்தில் மட்டும் 4,103 கிராமங்களுக்கு மின்சார விநியோகம் பரவலாக்கப்பட்டிருக்கிறதாம்.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 28-12-'55 புதன்

எதேச்சாதிகாரம்

"தனி மனிதர்களுக்கு உரிமையும் சுதந்திரமும் தன்மானமும் வேண்டும் என்ற கொள்கை அழிவைத் தவிர வேறெதையும் தேடித் தராது."

"தனி மனிதர்கள் சமூகத்துடன் ஒன்றி நிற்கும்போதுதான் ஒளிவிட்டுப் பிரகாசிப்பார்கள். அந்தச் சமுதாயமோ ஒருவனின் ஆளுகைக்கு உட்பட்டால்தான் ஒளிவிட்டுப் பிரகாசிக்க முடியும்."

என்று, எதேச்சாதிகாரம்—சர்வாதிகாரம் என்ற சொல்லுக்குப் பொருள் விளக்கம் தந்துவிட்டுப் போனார்கள், வரலாற்றுச் 'சிறப்பு'ப் பெற்ற ஆதிக்க வெறியர்களான இட்லரும், முசோலினியும்!

அந்தப் பொருள் விளக்கத்திற்கு இலக்கணம் படைக்க முற்பட்டிருக்கும் இந்தியப் பிரதமர் பண்டித நேரு, 'எதேச்சாதிகாரி' என்று பகிரங்கமாகக் கூறிக்கொண்டு பழி தேடிக்கொள்ளாமலேயே 'ஜனநாயகம்' என்ற போர்வையிலேயே 'எதேச்சாதிகாரம்' புரிய முடியும் என்று விளம்பியிருக்கிறார்.

இந்தியத் துணைக் கண்டத்து மக்களுக்கு, வெள்ளை ஏகாதிபத்தியத்தின் ஆதிக்க பிடியிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்ற உணர்வை ஊட்டும்போது, நமது மொழி—நமது பண்பு—நமது நாடு—நமது பாரம்பரியம்' என்று, பல்வேறு இன, மொழி மக்களிடத்திலும் தாயக உணர்வையும் சேர்த்து ஊட்டிய காங்கிரசார், இன்று 'அந்தத் தாயகஉணர்வு தலை காட்டவே கூடாது; எல்லாம் இந்தியா என்றஉணர்வே பெறவேண்டும்,' என்று, தங்கள் கட்சி மேலிடத்தாரே கூறுவது கேட்டுத் திகைத்துப் போயிருப்பதை எல்லோரும் அறிவர்.

"'தாயகம், தாய் மொழி' என்ற நோக்கமெல்லாம் மிகக் குறுகிய நோக்கங்கள்; அவற்றை 'இந்தியாவின் ஒற்றுமை'க்கு உலைவைக்க நினைப்போரே உயர்த்திப் பிடிப்பர்; இந்தியாவின் ஒற்றுமைக்கு ஊறு தேடுவதும், அதனை அழிப்பதும் நம்மைப் பொறுத்து ஒரு அவல முடிவாகவே இருக்கும்"—என்று, தங்களுக்குக் கட்சியிலும், ஆட்சிப் பீடத்திலும் கிடைத்திருக்கும் மலை போன்ற அதிகார பலத்தால் இந்தியப் பேரரசின் மூலவர்களாயிருப்போர் கடுகடுத்த முகத்துடன், காரசாரக் குரலில் உபதேசம் போலவும், எச்சரிக்கை விடுத்தும் பேசி வருவதைத் தாயகப் பற்றும், தாய்மொழிப் பற்றும் கொண்ட அனைவரும்—காங்கிரசார் உள்ளிட்டு—கூர்ந்து கவனித்துக் கொண்டுதானிருக்கின்றனர்.

தியாகம் நிறைந்த வரலாறும், சிறந்த பண்பும் கொண்ட பாரம்பரிய மண்டலம் குமுறுகிறது—எரிமலையாக! இன்னும் வெடிக்கவில்லை!

தனிப்பண்பு, தனி மொழி, தனி மதம் முதலியன கொண்ட பாஞ்சாலம் கொந்தளிக்கிறது—அலைகடலாக! கொள்ளை கொள்ள எல்லை தாண்டவில்லை இன்னும்!

இப்படியே 'எங்கள் மொழி—எங்கள் மண்—எங்கள் வளம்—எங்கள் சிறப்பு—எங்கள் வாழ்வு' என்ற முழக்கம், இன்று இந்தியத் துணைக்கண்டத்தின் பரந்த நிலப்பரப்பெங்கும் எழும்பி, வானத்தில் மோதி எதிரொலித்துக் கொண்டிருக்கிறது—உலகெங்கும்.

இந்த முழக்கம், இந்தியப் பேரரசின் பாதுகாவலர்களுக்கு கலக்கத்தையும், அச்சத்தையும் மூட்டியதின் விளைவாக, மாநிலப் புனரமைப்பு என்ற விஷயத்தையே காலவரையறையின்றி ஒத்திப்போட்டுவிடக் கூட உள்ளூர நினைக்கத் தூண்டியிருக்கிறது.

'மொழிவழி மாநிலம் என்ற பெரு முழக்கத்தை ஒடுக்குவதற்கு, மாநிலப் புனரமைப்பு என்ற கண்துடைப்பே போதும்,' என்றெண்ணித் திட்டமிட்டுச் செயல்பட முனைந்தவர்கள், மாநிலக் குழுவின் அறிக்கை குறித்து மக்கள் சபையில் விவாதம் நடைபெற்றபோது, அங்கும் மொழிவழி மாநிலம் என்ற முழக்கம் இடியாக ஒலித்ததைக் கேட்டு நடுநடுங்கிய நிலையில் இருந்தனர் இந்தியப் பேரரசினர்!

இந்த நிலையில்தான், 'தாயகம்—தாய் மொழி' என்று பேசுவது, 'ஒற்றுமை'யை உருக்குலைப்பதாகும்—என்ற அபாயச் சங்கை ஊதிவிட்டு, 'மண்டல மன்றங்கள் அமைக்க வேண்டும்'—என்ற வெடிகுண்டை வீசினர் பிரதமர் நேரு.

இந்த 'மண்டல மன்றங்கள்' எப்படி ஆதிக்க மண்டலங்களாகப் பெருருக் கொள்ளும் என்பதை நேற்று முன்தினம் எழுதியிருந்தோம்.

இப்போது, பண்டிதரின் யோசனை பற்றிய சாதகபாதகங்களை அல்ல நாம் இங்கு எடுத்துக்காட்ட விரும்புவது. மக்கள் சபையில் தான் தெரிவித்த யோசனை குறித்துப் பண்டிதர், மாநிலங்கள் சபையில் விளக்கம் தந்த முறை இருக்கிறதே—அதைத்தான் நாம் குறிப்பிட விரும்புவது.

'பிரதமர்' என்ற முறையிலோ, 'தனிப்பட்ட நேரு பெருமான்' என்ற முறையிலோ அவர் ஆயிரம் யோசனைகள் கூறட்டும். ஆனால் அந்த யோசனைகள் ஏற்றுக் கொள்ளத்தக்கனவா என்பதை ஆராயவேண்டிய பொறுப்பும், கடமையும் மக்கள் சபைக்கு உண்டு.

ஆனால், பிரதமர் நேரு பேசுகிறார்—மாநிலப் புனரமைப்புப் பற்றி மக்கள் சபை எந்த ஒரு இறுதி முடிவை மேற்கொண்டாலும், அந்த முடிவின் ஒரு பகுதியாகத் தனது 'மண்டல மன்ற அமைப்பு' யோசனையும் இடம் பெறும்—என்று. மக்கள் சபை இன்னும் அந்தப் பெரிய மனிதரின் யோசனையை விவாதிக்கவே இல்லை. அதற்குள், அதன் முடிவு தன் விருப்பப்படியே அமையும் என்கிறார் பிரதமர். எவர் என்ன கூறினாலும், எந்த ஜனநாயக வாதம் கிளப்பினாலும், தனது யோசனையை அமுல் செய்தே தீருவாராம் நேரு பெருமான்.

இவரது இந்தப் போக்கை, எதேச்சாதிகாரப் போக்கு என்று கூறாமல் வேறென்னவென்று அழைப்பது?

எவ்வளவு தெரியுமா?

இந்தியாவில் ஏற்படுத்தப்பட்டுள்ள மூன்று எண்ணெய் சுத்திகரிப்புச் சாலைகளில் இதுவரையில் வெளிநாட்டு மூலதனம் ரூ 28,76,00,000-மும், இந்திய மூலதனம் ரூ. 15,01,00,000-மும் முதலீடு செய்யப்பட்டிருக்கிறதாம்.

இந்தச் சுத்திகரிப்புச்சாலைகளில் மேற்கொண்டும் ரூ. 13,97,00,000 வெளிநாட்டு மூலதனமும், ரூ 1,25,00,000 இந்திய மூலதனமும் முதலீடு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

டிசம்பர் 30-ந் தேதி முதல் கல்கத்தாவிலிருந்து வெளிநாடுகளுக்கெல்லாம் நேரடியாக 'ரேடியோ-டெலிபோன்' செய்திகள் அனுப்ப வசதி ஏற்பட்டுவிடுமாம். 75 ஏக்கர் நிலத்தில் இதற்கான நிலையம் ஏற்படுத்தப்படுகிறது.

'அவதியுறும் ஆசிரியர்கள் நல்ல குடிமக்களை உண்டாக்க முடியாது'

கல்வி நிபுணர்குழுக் கூட்டத்தில் டாக்டர் ஜே.சி.கோஷ்

புதுடில்லி, டிச. 25—

"வேலையில்லாத் திண்டாட்டத்திற்குப் பரிகாரம் தேடுவதற்கான வழி, இடைநிலைக் கல்வியை சரிவரத் திருத்தி அமைப்பதைப் பொறுத்துத்தான் உள்ளது,"

என்று, திட்டக் குழுவின் கல்விப் பிரிவு உறுப்பினரான டாக்டர் ஜே. சி. கோஷ் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் செலவிட உத்தேசித்திருக்கும் ரூ. 4,800 கோடியில ரூ. 946 கோடி மட்டும் சமூக அபிவிருத்திக்காகச் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் கல்வி வளர்ச்சிக்காகச் செலவிட ரூ 320 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு குறைவான தொகை ஒதுக்கப்பட்டிருப்பதற்காக நான் வருந்தாமலிருக்க முடியாது; ஆனால், திட்டக் குழுவினர், ஒவ்வொரு மாநிலத்தையும் ஒவ்வொரு இலாகாவையும் பூரணமாகத் திருப்தி செய்ய முடியாது போய்விட்டது.

"ஒதுக்கப்பட்டுள்ள ரூ 320 கோடி அல்லாது, தொழில்நுணுக்க இதர வேலைகளுக்கான பயிற்சி நிலையங்கள் துவக்குவதற்கென ரூ. 112 கோடிவரை ஒதுக்கப்பட்டிருக்கிறது.

"மேலும், ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்துவதற்காக ரூ. 65 கோடி வரையில் ஒதுக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது

"வாழ்க்கைத் தேவைகளுக்காகத் தொடர்ந்து கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் அதிருப்தி அடைந்துள்ள ஆசிரியர் கூட்டம், தங்களது ஏமாற்றத்தையும், வெறுப்பையும் இப்போதுள்ள மாணவர்களின் பசுமரம் போன்ற மனத்தில் புகுத்திவிடுவார்கள். மேலும், மிகக்குறைவான சம்பளம் தரப்படுவதால், திறமையுள்ளவர்கள் அந்தப் பணியை விரும்பி ஏற்கமாட்டார்கள். அதனால் முதல்தரமான குடிமக்களை உண்டாக்குவதென்பது முடியாத காரியமாகும். எனவே, ஆசிரியர்களின் தரத்தை உயர்த்துவதற்குத்தான் முதலிடம் தரவேண்டும். இந்தப் பிரச்சினை, வேலையில்லாதோர் பிரச்சினைபோலில்லாது நம்மிடம் ஏற்கனவே உள்ள வழிகளைக்கொண்டு நாம் மனம் வைத்தால் மட்டும் செய்யக் கூடியதாகும்."

மேலிடத்திற்கு இந்தி பிரசாரத் தலைவர் காவடி

மாற்றுந்தாய் மனப்போக்குடன் சென்னை சர்க்கார் நடக்கிறதாம்

இந்திப் பிரச்சார மாநாட்டில் வேதரத்தினம் ஒப்பாரி

திருச்சி, டிச. 25—

இந்தி மொழியைப் பள்ளிக்கூடங்களில் போதிக்கும் விஷயத்தில் சென்னை சர்க்கார் மாற்றுந்தாய் மனப்போக்குடன் நடந்து கொள்கிறார்களாம்.

யாரோ சிலருக்காக அஞ்சி அஞ்சிச் சாகிறார்களாம்; துணிவுடன் இந்தி மொழியைப் பள்ளிகளில் கட்டாயப்பாடமாக்கவில்லையாம்.

இன்று இந்தியைப் பரப்புவதில் ஊக்கம் செலுத்தாவிட்டால், எதிர்காலத் தமிழ் மக்களுக்குச் சென்னை மாநில சர்க்கார் பெரும் அநீதி இழைத்தவர்களாவார்களாம்.

இப்படியெல்லாம் புலம்பியிருக்கிறார் சர்தார் வேதரத்தினம் (பிள்ளை).

தமிழ்நாடு இந்திப் பிரச்சாரகர்களின் 11-வது மாநாட்டில் பேசிய தமிழ்நாடு இந்திப் பிரச்சார சபைத் தலைவரான அவர் மேலும்,

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க.)

சவமொழி இன்னும் சாகவில்லையாம்!

டாக்டர் பட்டாபி சப்பைக் கட்டு

ஐதராபாத், டிச. 26—

"சவமொழி (சமஸ்கிருதம்) ஒரு செத்துப்போன—வழக்கொழிந்துவிட்ட மொழி என்று கூறுவது உண்மையல்ல; அது ஒரு உயிருள்ள மொழி; நமது வட்டார மொழிகளில் பெரும்பான்மையாக உயிருடன் விளங்கிக் கொண்டிருக்கும் மொழி,"

என்று, டாக்டர் பட்டாபி சீதாராமையா இங்கு, கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இதுவரை மொத்தம் 452 சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

இவ்வாண்டு ஜனவரியிலிருந்து அக்டோபர் 31-ந் தேதி வரை மொத்தம் 67,19,904 பேருக்கு பி. சி. ஜி. மருந்து குத்தப்பட்டிருக்கிறது.

'சவமொழியை கட்டாய பாடமாக்கக்கூடாது'

'அதனால் ஒற்றுமை வளராது'

கீழ்த்திசை மாநாட்டில் நாராயணசாமி வரவேற்புரை

"கல்லூரிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் சவமொழியை (சமஸ்கிருதம்) கட்டாயப் பாடமாகப் போதிக்க வேண்டும் என்று 'சவமொழி பரிஷத்'தின் கடந்த கூட்டத்தில் கருத்தறிவிக்கப்பட்டிருக்கிறது; இந்தக் கருத்தை நான் ஏற்றுக்கொள்வதற்கு இல்லை. என்னைப் பொறுத்தவரையில் இது தேவையில்லாதது—விரும்பத்தகாதது என்றே கருதுகிறேன்.

"இன்னுமொரு மொழியை, தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் கட்டாயப் பாடமாகப் பள்ளிப் பாடத் திட்டத்தில் சேர்ப்பது, இளம் மாணவர்களுக்குத் தேவையில்லாத ஒரு பெருஞ் சுமையாகவே இருக்கும். ஏனெனில், சவமொழி ஒரு வேறுபட்ட மொழி—குறிப்பாகத் தமிழ் மொழியின் இலக்கண அமைப்பிலிருந்தே சவமொழி வேறுபட்டதாகும். தமிழ், சவமொழியிலிருந்து பிரிந்தது அல்ல. மேலும், சவமொழியைக் கட்டாயப் பாடமாக்குவது, இப்போதுதான் உயர்நிலைப் பள்ளி, கல்லூரி நிலைகளில், கல்வியின் பலன்களை அனுபவிக்க வாய்ப்புப் பெற்றிருக்கும் பின்தள்ளப்பட்ட வகுப்பாரின் நலன்களுக்கு அழிவு தேடித் தருவதாய் அமையும்.

"சவமொழியைக் கட்டாயப் பாடமாகப் போதிக்க முடியும் என்பதினாலேயே இந்தியாவில் ஒரு தேசீய ஒற்றுமையை உருவாக்கிவிட முடியாது.

"இந்த இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் ஒரே மொழியைக் கட்டாயமாகப் புகுத்தி, இராணுவக் கட்டுப்பாட்டுடன் உருவாக்கும் ஒரு 'ஒற்றுமை', நன்மை பயப்பதற்கு மாறாகத் தீமையே பயக்கக்கூடியதாக அமையும்.

"சவமொழி (சமஸ்கிருதம்) இன்று வழக்கு ஒழிந்துபோன ஒரு மொழியாகும். ஆனால் தமிழ் அப்படி அல்ல; இன்றுவரை, அறுந்துபடாத சரித்திரத் தொடர்பு கொண்டு தமிழ் நாடு முழுவதும் பேசப்பட்டுவரும் மொழியாகும்,"

—என்று, கீழ்த்திசை மொழிகள் மாநாட்டின் 18-வது கூட்டம் நடைபெறறபோது, வரவேற்புரை நிகழ்த்திய அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டி. எம். நாராயணசாமி(பிள்ளை) அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். மாநாட்டிற்கு டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார்.

44 சோஷலிஸ்டுகள் கைது

பண்டித நேரு சென்றதும் விடுவிக்கப்பட்டனர்

ஆர்ப்பாட்டம் நடத்துவதாக அறிவித்திருந்தனர்

கோவை, டிச 26—

பிரதமர் நேருவின் முன்பாகக் கூடி அமைதியாக ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக அறிவித்திருந்த சோஷலிஸ்டுகளில் 44 பேர்களை போலீசார் நேற்று கைது செய்து, நேரு வந்துவிட்டுத் திரும்பிச் சென்றதும் விடுவித்தனர்.

கொச்சி—சித்தூர் பகுதிகளில் சில தொழிற்சாலைகளைத் துவக்க வேண்டும் என்பதை வற்புறுத்துவதற்காகவும், சோஷலிச சமுதாயத்தைச் சீக்கிரம் அமைக்க வேண்டும் என்பதற்காகச் சில யோசனைகளைக் கூறுவதற்காகவும் தாங்கள் ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக சோஷலிஸ்டுகள் அறிவித்திருந்தனர்.

திங்கள் தோறும் 20000 அகதிகள்

புதுடில்லி, டிச. 26—

"திங்கள்தோறும் சுமார் 20,000 பேர் வரை கிழக்கு வங்கத்திலிருந்து இந்தியாவிற்கு அகதிகளாக ஓடிவந்து கொண்டிருக்கின்றனர்,"

என்று, அகதி புனரமைப்பு இலாகா மந்திரி மேகர்சந்த் கன்னு தெரிவித்திருக்கிறார்.

புயலால் பிரதானச் சாலைகளுக்குச் சேதம்

டில்லிக்குக் கோரிக்கை

தமிழ் நாட்டில், புயலால் சேதமுற்றப் பிரதானச்சாலைகள் மராமத்துக்கு ரூ. 2 இலட்சம் மானியம் உதவ வேண்டியதன் அவசியத்தை டில்லியில் மத்திய சர்க்கார் ஆலோசனை எஞ்சினீயரிடமும், போக்குவரத்து அமைச்சர் இலாகா அதிகாரிகளிடமும் பலமாக வற்புறுத்தியுள்ளதாகச் சென்னைச் சாலைகளின் பிரதம எஞ்சினீயர் கே நம்பியார் தெரிவித்துள்ளார்.

செய்திச் சுருள்

★

குயப்பேட்டையில் தி. மா. மு. கழக அமைப்பு

25—12—55 காலை 10 மணியளவில் சென்னை குயப்பேட்டைப் பகுதியில், திரு. வி. க. மறுமலர்ச்சி மன்ற மனையில், தோழர் டி எஸ் சண்முகம் தலைமையிலும், தோழர் டி. கே. பொன்னுவேலு முன்னிலையிலும் தி. மா. மு கழகக் கிளைத் தேர்தல் நடைபெற்றது. தோழர்கள் சோ. அண்ணாதுரை, வே. மு அன்பரசன், இரா. வடிவேலன் ஆகியோர் முறையே செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளராகவும், தோழர்கள் ந. கபீர்தாசன், ப. உமாபதி, க. பிச்சாண்டி, சோ. தாமோதரன், க. எழிற்செல்வன், மாசிலாமணி, மு. முனுசாமி ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

• • •

மேலூர் நகரக் கிளை தி. மா. மு. கழகம்

25—12—55ல், மேலூர் தி. மா. மு. கழக நகரக் கிளைச் செயற்குழுக் கூட்டம், தோழர் ப. தங்கவேல் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சா பெ. மலைச்சாமி, சி காதர்கனி, மா. பாண்டியன் ஆகியோர் கழகத்தின் எதிர்காலம் குறித்தும், கழக அமைப்பு முறை குறித்தும் பேசினர். பின்னர், தோழர்கள் இரா. சு. இராமசாமி, வே. சு நாதன், சம்சுதீன் ஆகியோரை முறையே செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளராகக் கொண்ட நிர்வாகக் குழுவும், தோழர்கள் பி. முன்னமலை, அ சேதுராமன், பெ. வீரணன், கு தளசி. மு சேதுராமன், அ. பெ. மலைச்சாமி, அ. இராமமூர்த்தி ஆகியோரடங்கிய செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

கூட்ட இறுதியில் பேராசிரியர் இருதயராஜ் மறைவிற்கும், புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்தும், மற்றும் பல முக்கியத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன

• • •

கூடலூர் தி. மா மு. கழக அமைப்பு

24—12—55 காலை 10 மணியளவில் தி. மு. கழகப் பணிமனையில், தோழர் கி. கோவிந்தராசன் தலைமையில் தி. மா மு. கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் இராசகுமார் பீட்டர், ச. சண்முகம், கோ. முத்துக்குமாரசாமி ஆகியோர் முறையே செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளராகவும் மற்றும் 18 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கே. எஸ். பாண்டியன் படிப்பகம்

25—12—55ல், சென்னை திருவல்லிக்கேணி மேற்படி படிப்பகப் புதிய நிர்வாகிகள் தேர்வுக் கூட்டம் தோழர் கங்காதரன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் சண்பகவேல், நெல்லை கபிலன், திருநாவுக்கரசு, மு பழனி, இ மு. நெடுமாறன் ஆகியோரை முறையே செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், பொறுப்பாளர்களாகவும், மற்றும் 10 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை துணை நடிகர் சங்க அமைப்பு

25—12—55 காலை 9½ மணியளவில், சென்னை கோடம்பாக்கம் பாரதி கலை மன்றத்தில், தோழர் பி. குப்புசாமி தலைமையில் துணை நடிகர் சங்க அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பி. குப்புசாமி, காளியப்பன், சோமசுந்தரம், கே. பி தூயமணி ஆகியோர் பேசியபின், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களை கௌரவத் தலைவராகவும், தோழர்கள் எம். ஜி இராமச்சந்திரன் கௌரவச் செயலாளராகவும், எஸ். வி. சகஸ்ரநாமம் கௌரவப் பொருளாளராகவும் சங்கத்தில் அங்கம் வகிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளும்தீர்மானம் ஒன்று நடிக நடிகையர் அனைவராலும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட பின்னர், தோழர் பி குப்புசாமி, கே கே பெத்துராசு, கே. பி. தூயமணி, கே. ஆர். வெங்கட்ராமன், ஆகியோர் முறையே தலைவர், துணைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளராகவும், தோழியர் பி. ஜெயா, என். இராஜேசுவரி, எம். எச். பி. ஆச்சாரி ஆகியோர் முறையே துணைத் தலைவி, துணைச் செயலாளர், பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கொளத்தூர் (சேலம் மா.) பஞ்சாயத்துக் குழு

24—12—55 மாலை, கொளத்தூர் பஞ்சாயத்தின் அவசரக் கூட்டம், துணைத் தலைவர் கே. வி. ரங்கப்பன் தலைமையில் நடைபெற்றது. தஞ்சை, திருச்சி, இராமநாதபுரம், மதுரை மாவட்டங்களில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் அனைவரும் எழுந்து நின்று மௌனம் மேற்கொண்டனர். பின்னர், புயல் நிவாரண வேலைகளில் ஓரளவு நடவடிக்கை எடுத்தவரும் மாநில சர்க்காரைப் பாராட்டியும், கோவை மேற்கு வட்டார அதிகாரியின் அனுமதி எதிர்நோக்கி பஞ்சாயத்து நிதியிலிருந்து ரூ. 100 புயல் நிதிக்குக் கொடுப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

திருவள்ளுவர் முன்னணிக் கழகம்

23—12—55 இரவு 8 மணிக்கு சென்னை 5-வது வட்டம் மேற்படி கழகப் பணிமனையில் தோழர் எம். எஸ். கே. உலகநாதன் தலைமையில் நடைபெற்ற நிர்வாகக்குழுக் கூட்டத்தில், தோழர்கள் கா. அப்பாதுரை, மு. க. தமிழ்த்தம்பி, தி. கு. கரிகாலன், மு. கிருட்டிணன் ஆகியோர் முறையே தலைவராகவும், செயலாளராகவும், துணைச் செயலாளராகவும், பொருளாளராகவும் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

குமாரம் சௌந்திர பாண்டியனர் நினைவுப் படிப்பகம்

20—12—55ல், மேற்படி படிப்பக உறுப்பினர் கூட்டம், தோழர் எஸ். செபஸ்டியன் தலைமையில் நடைபெற்றபோது, பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதென்றும், புயலாலும், பெருமழையாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவித்தும், மற்றும் பல முக்கியத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

கழகச் செய்திகள்

★

ஆம்பூர் (வ.ஆ.மாவட்டம்) நகர தி. மு. கழகம்

18—12—55 காலை 10 மணிக்கு நகர தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம், தோழர் இரா. திருநாவுக்கரசு தலைமையில் கழக அலுவலகத்தில் நடைபெற்றபோது, பேராசிரியர் இருதயராஜ் அவர்களது மறைவுக்கும், தஞ்சை, திருச்சி, இராமநாதபுரம். மதுரை மாவட்டங்களில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் அனுதாபம் தெரிவித்துக் கொண்டும், நகரக் கழகத் துணைச் செயலாளர் தோழர் சி. ஆர் கே சாமி அவர்களது விலகுதலை ஏற்றுக்கொண்டு அன்னாரது கழகப் பணிக்கு நன்றி தெரிவித்துக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இராமநாதபுரம் (கோவை மாவட்டம்) தி. மு. கழகம்

25—12—55 இரவு 8-மணியளவில் கழகப் பணி மனையில் நடைபெற்ற கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில், செயலாளர் தோழர் மு ஆறுமுகம் அவர்களது விலகுதலை ஏற்றுக்கொண்டும், தோழர் இராசநாயகம் அவர்களைச் செயலாளராகவும், தோழர் கிருஷ்ணன் அவர்களைச் செயற்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுத்து முடிவு செய்யப்பட்டது. பின்னர், வருகிற பொங்கல் விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடுவதெனவும், ஒவ்வொரு உறுப்பினரும் பொங்கல் விழாவிற்கென ரூ. 1 நன்கொடை தரவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டதுடன், கழக உறுப்பினர்களைச் சேர்ப்பதில் தீவிரப் பணியாற்றுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

தி. மு. கழகப் பிரச்சாரக் கூட்டம்

25—12—55ல், நத்தியம்பாக்கம் சிற்றூரில், பொன்னேரி வட்டச் சார்பிலும், மேலூர் கிளை ஆதரவிலும் ஓர் பிரச்சாரக் கூட்டம், தோழர் சி. பி. மதியழகன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஆ. கிருட்டிணன், இராதாமணாளன், என். வி. தங்கசாமி மு குணசீலன் ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

மேலிடத்திற்கு இந்திப் பிரச்சார...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலிடத்திற்குக் காவடி எடுக்கப்போவதாகச் சர்க்காரை மிரட்டவும் செய்தாராம்.

இந்தி வேண்டாமென்போரைக்காட்டிலும் இந்தி மீது 'காதல்' கொண்டோர்தான் அதிகம், என்று வேறு அவர் புளுகித் தள்ளினாராம்!

' இந்தி மொழி பயிலுவதற்குக் கடினமானது என்போர், தமிழையே சரியாகப் படிக்காதவர்கள் ' என்று வேறு கேலி பேசி மகிழ்ந்தாராம்!

இந்தி மொழியில் இலக்கியங்கள் இல்லை என்பது உண்மைதானும்; ஆனால், அந்தக் குறையை இந்த நாட்டுத் தமிழர்கள்தான் நீக்கிவைக்க வேண்டும் என்று வேறு 'குல்லாய்' போட முற்பட்டாராம்!

"இந்தி மொழியைப் பரப்புவது போன்ற முக்கியமான பிரச்சினையில் சென்னை சர்க்கார் அசட்டையாயிருப்பது வருந்தத்தக்கது. பள்ளிகளில் இந்தி போதிக்கும் விஷயத்தில், மாற்றாந் தாய் மனப்போக்குடன் சென்னை சர்க்கார் நடந்துகொள்வது, அவர்களுக்குப் பெருமை தரக் கூடியதல்ல!

" இந்தி படிப்பதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற பாட நேரமும், இந்திப் பண்டிதர்களை நடத்தும் முறையும் போற்றக்கூடியன அல்ல; சர்க்கார் நமது சர்க்காராயிருக்காவிட்டால், இந்தப் போக்கினை வன்மையாகக் கண்டிப்போம்; ஆனால், நமது சர்க்காராகப் போய்விட்டது—அதற்காக நாம் வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டும் என்பதல்ல!

" ஒரு வாரத்தில் இரண்டு மணி நேரம் மட்டுமே இந்தி மொழி போதனைக்கு ஒதுக்குவதைக் காட்டிலும், இந்தி மொழி போதனையையே பாடத் திட்டத்திலிருந்து நீக்கி விடுவதே நல்லதாகும்.

" வேறெல்லாப் பாடங்களுக்கும் பரீட்சை கட்டாயமாக இருக்கும்போது, இந்திக்கு மட்டும் கட்டாயப் பரீட்சை இல்லை. வெறும் காகிதத்தை மடித்துத் தந்துவிட்டு மாணவர்கள் போய்விடுகின்றனர்.

" இம்மாதிரி ஒரு கொள்கையைக்கடைப்பிடிப்பது இந்தி மொழிக்கே பெரியதொரு அவமானமாகும். தங்களுடைய தற்போதைய கொள்கையால் எதிர்காலத் தமிழர் சமுதாயத்திற்கு ஒரு பெரும் அநீதியை இந்தச் சர்க்கார் இழைக்கிறது; சில எதிர்ப்பாளர்களுக்காக சர்க்கார் அஞ்சிக் கிடப்பது கண்டு நான் மிகவும் வருந்துகிறேன்.

" எனவே, அனந்தசயனம்அய்யங்கார் போன்றவர்கள், மக்கள் சபையில் தங்களுக்குள்ள செல்வாக்கைப்பயன்படுத்தி, இந்தி மொழிக்கு உரிய இடத்தை இந்த மாநில சர்க்கார் தருமாறு செய்யவேண்டும்,"

என்றெல்லாம், வேதனையால்—வெட்க மேலீட்டால், புலம்பி அழுதிருக்கிறார்—சர்தார் வேதரத்தினம் பிள்ளை!

மதுரை மஜீத் நினைவுப் படிப்பகம்

24—12—55ல், மேற்படி படிப்பகத்தில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில் இவ்வாண்டு பொங்கல் விழாவை 29—1—56ல் கொண்டாடுவதென்றும், 'கண்ணீர்த் துளி' என்ற நாடகத்தை அன்று நடத்துவதென்றும் முடிவு செய்ததுடன், 6 பேர் அடங்கிய விழாக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. மற்றும் அனுதாபத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சொற்பயிற்சிக் கூட்டம்

25—12—55 காலை 11 மணிக்கு கோவை 29-வது வட்டம் அழகிரி நினைவுப் படிப்பகச் சொற் பயிற்சி மன்றச் சார்பில், தோழர் மு. சண்முகம் தலைமையில் ' நூல் நிலையம் தேவையா ?' என்னும் பொருள் பற்றிப் பல தோழர்கள் பேசினர்.

வாலாஜாபாத் இந்து மதப் பாடசாலை

பாராட்டு வாழ்த்துக் கூட்டம்

18—12—55 காலை, வாலாஜாபாத் இந்துமதப் பாடசாலையில் ஒரு பாராட்டு விழாக் கூட்டம் நடைபெற்றது. செங்கற்பட்டு நகராட்சி மன்றத் தலைவராகத் திரு மே. வேதாசலனார் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்றதையும், திரு. வி. ஆர். சீதாபதி வேலூர் நகராட்சி மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றதையும், திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் தென் பகுதியின் விளம்பர அதிகாரியாகப் பதவியேற்றதையும் பாராட்டுவதற்கு இவ்விழா நடத்தப்பெற்றது.

திரு. பி. டி. சுவாமிநாதனார் விழாவிற்குத் தலைமை ஏற்று, மூன்று பேர்களையும் பாராட்டிப் பேசியதோடு, பாடசாலைக்கும் அவர்கள் தங்களால் செய்யக்கூடிய பல உதவிகளையும் செய்வார்கள் என்று கூறினார்.

சென்னையிலிருந்து மாணவர் மன்றம், பெத்துநாய்க்கன்பேட்டை தாய்மார் கழகம், சென்னைத் தமிழாசிரியர் கழகம், செங்கற்பட்டு மாவட்டத் தமிழாசிரியர் கழகம், மீஞ்சூர் இளைஞர் கழகம் ஆகியவைகளின் தலைவர்களும், உறுப்பினர்களும் பாராட்டு விழாவில் கலந்து கொண்டனர்.

பாடசாலைச் செயலாளர் திரு. வா. தி. மாசிலாமணி யாவருக்கும் நன்றி தெரிவித்தார்.

திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் தமக்குத் தரப்பட்ட பாராட்டுதல்களுக்கு நன்றி தெரிவித்தும், பாடசாலை அலுவலர்களைப் பாராட்டியும் பேசினார்.

மாவட்டத்திலிருந்து வெளியேற ஆதிவாசித்தலைவர்களுக்கு உத்தரவு

நிலம் கோருமாறு மக்களைத் தூண்டினாராம்!

சூரத், டிச. 27—

வலோட் வட்டத்தைச் சேர்ந்த எட்டு ஆதிவாசித் தலைவர்கள் சூரத் மாவட்டத்தைவிட்டு இரண்டாண்டுகளுக்கு வெளியேறிவிட வேண்டும் என்று உள்ளூர் அதிகாரிகளால் கோரப்பட்டிருக்கின்றனராம்.

48 மணி நேரத்திற்குள்ளாக அவர்கள் வெளியேற வேண்டுமென உத்தரவிடப்பட்டிருக்கிறது.

வலோட் வட்ட ஆதிவாசிகளை அந்தத் தலைவர்கள், அங்குள்ள நிலங்களெல்லாம் தங்களுக்கே தரப்பட வேண்டும் என்று கோருமாறு தூண்டிவிட்டார்களாம்

மேலும், தங்கள் தலைவரான ராம்தாஸ் மகராஜ் என்பாரை நிலங்களை எல்லாம் தங்களுக்கு விநியோகிக்குமாறு கேட்கவும் ஆதிவாசிகளைத் தூண்டிவிட்டார்களாம்.

ஆதிவாசிகள் தலைவரான ராம்தாஸ் மகராஜ் என்பார், இப்போது தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் சிறை வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

புயல் நிவாரணச் சிறப்புக்கூட்டம்

★

1—1—56 மாலை 5 மணிக்கு

சென்னை-எழும்பூர் டென்னிஸ் ஸ்டேடியத்தில்

(எழும்பூர் இரயிலடிக்கருகில்)

நடைபெறும்

அன்னு
நெடுஞ்செழியன்
கருணாநிதி

மற்றும் பலர் பேசுவர்

★

அனுமதி நிபந்தனை:

பயன்படக்கூடிய துணி ஒன்று தருவோரே அனுமதிக்கப்படுவர்

—சென்னை மாவட்ட தி.மு.க

சென்னை சர்க்காரின் 'சோஷலிச மாதிரி'ப் போக்கு!

கதவடைப்பை எதிர்த்துப் போராடும் தொழிலாளர்கள் 12 பேர் கைது

சென்னை, டிச 27—

குஜராத்தி முதலாளி ஒருவருக்குச் சொந்தமான 'மைசூர் மெட்டல் தொழிற்சாலை—இந்துஸ்தான் ரோலிங் தொழிற்சாலை'யின் ஒரு பிரிவை, சட்ட விரோதமாக, கடந்த மூன்று திங்களுக்கு மேலாக மூடிவைத்து, சுமார் 200 தொழிலாளர்களைப் பட்டினி போட்டு வதைத்து வருவதை எதிர்த்து, வேலை இழந்து தவிக்கும் தொழிலாளர்கள், இன்று, தங்கசாலையில் உள்ள ஆலையின் நிர்வாக அலுவலகத்தின்முன் கூடிப் பட்டினிப் போர் துவக்கியுள்ளனர்.

முதல் பிரிவினராகப் போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் 12 பேரை போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

தொடர்ந்து தொழிலாளர்கள், அலுவலகத்தின் முன் தினமும் கூடி, பல பிரிவினராகப் பட்டினிப் போருடன் அமைதியாக மறியலும் செய்வர் என்று அந்தத் தொழிலாளர் சங்கச் செயலாளர் அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார்

கடந்த செப்டம்பர் திங்கள் 19-ந் தேதியிலிருந்து அந்த குஜராத்தி முதலாளி, எந்தவிதமான காரணமும் காட்டாமல் ஆலையை மூடிவிட்டிருக்கிறார்; மேலும், உண்மையிலேயே தொழிற்சாலையை மூடிவிடப்போகிறார் என்றும், அங்கு பணியாற்றிய தொழிலாளர்களுக்கு சட்டப்படி தரவேண்டிய நஷ்டஈட்டையும் தர இந்த முதலாளி மறுத்துவருகிறார்.

இந்தத் தகராறு குறித்துத் தொழிலாளர்கள் சார்பில் தொழிற் சங்கப் பிரதிநிதிகள், சர்க்கார் தொழிலாளர் இலாகாவிடத்தில் முறையிட்டும், சட்டவிரோதமாக நடந்துகொண்டுள்ள முதலாளி மீது நடவடிக்கை எடுத்து தொழிலாளர்களுக்கு வாழ்வுதர இதுவரையில் கையாலாகாதத் தன்மையுடன்தான் காங்கிரஸ் சர்க்கார் இருந்துவந்திருக்கிறது.

சர்க்காரின் இந்தப் போக்கினால், வேலை இழந்து தவிக்கும் இந்த தொழிலாளர்கள் நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவதைத் தவிர வேறு வழியில்லாது போய்விட்டது; அதனால்தான், இன்று போராடத் துவங்கியுள்ளனர்.

கடந்த 24-ந் தேதியன்று தொழிலாளர்கள் தங்கள் நியாயமான கோரிக்கைகளையும், போராட்டத் திட்டத்தையும் மக்களுக்கு விளக்குவதற்காக ஒரு பொதுக்கூட்டம் நடத்தினார்கள்.

தோழர் எஸ் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடந்த அந்தப் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் ஏ எஸ் கே. அய்யங்கார், ரமணி, கே. டி. கே. தங்கமணி (கம்யூனிஸ்டுக் கட்சி) முதலிய-ஆர். எஸ் பாண்டியன், காஞ்சி - கல்யாணசுந்தரம் (தி. மு கழகம்) முதலியோரும் கலந்துகொண்டு, சர்க்காரின் போக்கையும், முதலாளியின் சண்டித்தனத்தையும் கண்டித்துப் பேசினர்.

இன்று தொழிலாளர்கள் போராட்டத்தில் இறங்கியபோது மட்டும ஓடோடிவந்து சட்டத்தை நிலைநிறுத்த முற்படும் சர்க்கார், தொழிலாளர்களுக்கு நலன்பயக்கும் சிறிய சட்டங்களை நிலைநாட்ட மட்டும் ஏன் தயங்குகிறது என்ற கேள்வியைத்தான், போராட்டத்தைப் பார்த்த பொதுமக்கள் கேட்கின்றனர்.

சர்க்காரின் செயலைக் கண்டித்து, தமிழ் நாடு தொழிற் சங்கக் காங்கிரசும் அறிக்கை ஒன்று வெளியிட்டிருக்கிறது.

'எளிய வாழ்வு என்ற தத்துவம் வறுமையை பூஜிப்பதே'

'ஏழ்மையை தேசீயக் கொள்கையாக ஏற்பது அபத்தம்'

தபோவனக் கால பெருமை பேசுவோருக்கு பணிக்கர் தரும் இடித்துரை

"மக்கள் கொண்டுள்ள மதம் பற்றியக் கருத்துக்கள், தேசியம் பற்றிய தவறான உணர்வு, பண்டைக் காலம் பற்றிய நெறிகெட்ட நோக்கம் இவற்றில் எல்லாம் அடிப்படையான தீவிரமான மாற்றம் ஏற்பட்டால்தான், நாட்டின் பொருளாதார, சமுதாயத்துறைகளில் முன்னேற்றம் காணுவது சாத்தியமானதாயிருக்க முடியும்.

"உயர்ந்த சிந்தனையை ஊக்குவிப்பதற்கு என்று கூறப்படும் எளிய வாழ்க்கை என்ற தத்துவம் வறுமையைப் பூஜிப்பது என்பதைத் தவிர வேறெதுவுமல்ல.

"ஏழ்மையைத் தாமாக மனமுவந்து ஏற்றுக்கொள்வது என்பது பெரிய காரியம்தான். இந்தக் காரியத்திற்கு அடிப்படையாக அமைகிற தேவைகளை உதறித்தள்ளுதல் என்பதை உலகம் எந்தக் காலத்திலும் மதித்தே வந்திருக்கிறது. ஆனால் ஏழ்மையை—வறுமையைத் தேசிய இலட்சியமாக ஏற்றுக்கொள்வது என்பது முழுவதும் அபத்தமான ஒன்றாகும்,"

இவ்வாறு, சர்தார் கே எம். பணிக்கர், விசுவபாரதி பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் சொன்னார்:—

"எந்தக் காலத்திலும் இந்தியாவில், எளிமை — வறுமை ஒரு கொள்கையாகப் போதிக்கப்பட்டதில்லை. ஒருவேளை அக்காலத்தில் சில ரிஷிகளும் முனிபுங்கவர்களும் வறிய வாழ்க்கை நடத்தியிருக்கலாம்; ஆனால், 'சப்த ரிஷிகள்' எனப்படுவோரும், கடவுளர்களுள் ஒருவரான சிவனைத் தவிர, மற்றக் கடவுளர்களுங்கூட—எளிய வாழ்வைத் துறந்து, ஆடம்பர வாழ்க்கை உடையவர்களாகத்தான் அவர்களது உடை, பாவனைகள்மூலம் காட்டப்பட்டிருக்கிறார்கள்.

"எது எப்படியானாலும், வறுமையை நாமாகவே வலிய வணங்கி ஏற்றுக்கொள்வது சுத்த அபத்தமான ஒன்றுதான். இந்தக் கொள்கை, நமது நாடு வறுமையில் உழன்றுகொண்டிருந்தக் காலத்தில், பிறரது குறை சொற்களினின்றும், தங்களைத் தப்புவித்துக்கொள்ள சர்க்கார் மேற்கொண்ட நல்ல ஒரு காரணமாக அமைந்திருக்கலாம். ஆனால், பொருளாதாரத் துறையில் பெருமளவு முன்னேற்றம் காண்பதற்காகவே நாட்டின் கவனமும், முயற்சியும் திருப்பப்பட்டு, மக்கள் அனைவரும் ஆடம்பர வாழ்வைப் பெறவேண்டுமென்ற கருத்து நிலவுகிற இவ்வேளையில் இந்தக் கொள்கையைக் கடைப்பிடிப்பதானால், அது ஒரு வழியில் சமூக விரோதமான கொள்கையாகவேகூட வந்துவிடும் இக்கொள்கையினை நல்ல அறிவுடைத்த எவருமே ஒப்புக்கொள்ள மாட்டார்கள்."

கிராமங்களையும், கிராமத் தொழில்களையும் குறித்துப் பேசுகையில் அவர் குறிப்பிட்டார்:—

"இந்திய நாட்டின் வாழ்க்கையில் கிராமங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை எவரும் ஒப்புமறுக்கமாட்டார்கள்; கிராமங்களில் கைத்தொழில்கள் வளர்ச்சியடைய வேண்டுமென்பதையும் எவரும் மறுக்க முடியாதுதான். கிராமாந்திரப் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டால்தான் நாட்டின் பொருளாதாரத் துறையிலும் அபிவிருத்தி ஏற்பட இயலும்.

"ஆனால், நகர்ப்புறக் கிராமாந்திரங்களுக்குச் சென்று வறிய வாழ்வு நடத்தினால்தான் நாட்டின் பொருளாதார நிலை அபிவிருத்தி பெறும் என்று நினைப்பது மிகவும் வேடிக்கையானதாகவே அமைகிறது.

"இந்தியாவைப் பொறுத்த மட்டில், இன்று, பல தொழில்களும் சாதி முறைகளை அடிப்படையாகத்தான் கொண்டிருக்கின்றன. அத்தொழில்களால் நாட்டின் பொருளாதாரத் துறையிலும் நல்ல அபிவிருத்தி கிடைத்து, தொழிலும் நல்ல முன்னேற்றம் அடையுமானால் அவற்றை ஊக்குவிப்பதில் எவ்விதத் தவறுமில்லை.

"ஆனால் செத்துக்கொண்டிருக்கிற ஒரு தொழிலுக்கு மீண்டும் புத்துயிர் அளித்து, அதனை ஆக்கம் பெறச் செய்வதற்கான முயற்சிகள் அனைத்தும், மீண்டும் சாதி முறைகளை உருவாக்கிப் பலப்படுத்துகின்ற நிலையை உருவாக்கும் என்ற உண்மையை மட்டும் எந்த வகையிலும் மறந்துவிடக்கூடாது. எனவே, செத்துக்கொண்டிருக்கிற தொழிலுக்குப் புனர்வாழ்வு கொடுப்பதால் சாதி முறைக் கேடுகளை மீண்டும் நிலைநாட்டும் நிலை ஏற்படுகின்றபோது, இந்தியா முன்னேற வேண்டுமென்ற கருத்துக் கொண்டிருந்தால், அத்தகுத் தொழில்களை வேரோடு மாய்க்க வேணடுமென்பதை எல்லோரும் ஒப்புக் கொண்டுதான் ஆவர்.

"அனைத்தையும் துறந்து, மரங்களின் அடியில் உட்கார்ந்து தவம் செய்துகொண்டு வாழ்ந்த 'தபோவன' அடிப்படையில் இந்தியாவை உருவாக்கவேண்டுமென்ற கருத்து இன்று நிலவுகிறது. ஆனால், என்னைப் பொறுத்த அளவில், இந்தியா, எந்த ஒரு காலத்திலாயினும் இந்த அடிப்படையில் உருவாகி இருந்ததா என்றே தெரியவில்லை. இதுவரையிலும் நாம் தெரிந்துகொண்டிருக்கிற சரித்திரத்தில் இதற்கு ஆதாரமே கிடையாது. ஏதோ சிற்சில இடங்களில் மட்டும்தான் ஒன்றிரண்டு 'தபோவனங்'கள் இருந்ததாகத் தெரிகிறது.

"எனவே, நமது அரசியல் கோட்பாடுகளும் 'தபோவன' அடிப்படையில் சிக்கனமும் எளிமையுமான வாழ்வைக் கொண்டதாக இருக்கவேண்டுமென்று கூறுவது பரிகாசத்திற்குரிய ஒன்றே அல்லாது வேறல்ல."

நியாயமான நிபந்தனை மீது...

பேச்சுவார்த்தை நடத்த கம்யூனிஸ்டுகள் தயாராம்!

சிங்கப்பூர், டிச. 26—

"தாக்குதலை நிறுத்தி, நியாயமான நிபந்தனைகள் மீது பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு மலேயா சர்க்கார் தயாராக இருந்தால், மலேயா கம்யூனிஸ்டு கட்சியும் போர் நிறுத்த உடன்படிக்கை செய்து கொள்வதற்குத் தயாராக இருக்கிறது;" என்று, கம்யூனிஸ்டு கட்சி, அறிக்கை ஒன்று விடுத்துள்ளதன்றி, சமரசப் பேச்சுக்களில் கலந்துகொள்வதற்கு தனது பிரதிநிதிகளையும் நியமித்துவிட்டதாம்.

'அயல் நாட்டு உதவி அற்பமானதுதான்'

பிரதமர் நேரு கூறுகிறார்

திருச்சூர், டிச. 26—

"இந்தியாவின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அயல் நாடுகளிலிருந்து கொஞ்சம் உதவி கிடைப்பது உண்மையே; ஆனால் அவர்கள் தரும் தொகை மிகவும் சொற்பமானதாகும்; இந்தியாவின் முன்புள்ள பிரச்சினையின் அளவுடன் ஒப்பிடுகையில் அதை மிகவும் அற்பமானதென்றே கருதவேண்டும்"

என்று, பிரதமர் நேரு பவரட்டி கிராமத்தில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

குந்தா நீர்விசைத் திட்டம்

மத்திய சர்க்கார் அனுமதி அளித்துவிட்டனராம்

சென்னை, டிச. 26—

ரூ 30 கோடி செலவில் துவக்கப்படவிருக்கும் குந்தா நீர்விசைத் திட்டத்திற்கு மத்திய சர்க்கார் பூர்வாங்க அனுமதி அளித்திருப்பதாகச் சென்னை சர்க்காருக்குத் தகவல் கிடைத்துள்ளதாம்.

அடுத்த மாதத்தில், இத்திட்டத்தின் துவக்கப் பணிகளுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படக்கூடுமாம்.

இரண்டாவது ஐந்தாண்டுத திட்டத்தில் துவக்கபபட்டு, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இவ்வேலைகள் முடிவடையக்கூடுமாம

இத்திட்டத்திற்கான மத்திய சர்க்காரின் இறுதி அனுமதி அடுத்த மார்ச்சு மாதத்தில் கிடைத்துவிடக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறதாம்.

திட்டம் தீட்டுகிறதாம் சென்னை சர்க்கார்!

ரூ. 120-இலட்சம் செலவில் பால் பண்ணை காலனியாம்!

சென்னை, டிச. 26—

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நிறைவேற்றப்படுவதற்காக, சென்னைக்கு அருகிலுள்ள எருக்கஞ்சேரியில், ரூ 1 20,000 செலவில் பால் பண்ணை ஒன்றை நிறுவுவதற்கான திட்டம் மாநில சர்க்காரால் தயாரிக்கப்பட்டிருக்கிறது," என்று, சுகாதார அமைச்சர் ஏ. பி. ஷெட்டி கூறியுள்ளார்.

கால்நடைகளுடன், பால்காரர்களையும் இக்காலனியிலேயே வைத்திருப்பதற்கு இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளதாம்.

இத்திட்டத்தின்படி, தினசரி கறக்கப்படும் எருமை—பசும் பால் தனித்தனியாகப் புட்டிகளில் அடைக்கப்பட்டு, பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படுமாம்.

தனி மாநிலமாக தெலிங்கானு!

கோரிக்கை உரம் பெற்றுள்ளதாம்

ஐதராபாத், டிச 25—

"தெலிங்கானு தனி மாநிலமாக இருக்கவேண்டும் என்ற கோரிக்கை உரம் பெற்று வருகிறது; எனவே, காங்கிரஸ் உயர்தரக் குழுவின் அங்கீகாரம் பெறும் என்று நம்புகிறோம்," என, ஐதராபாத் பிரதேச காங்கிரஸ் தலைவரான ஜே வி. நரசிங்கராவ், டாக்டர் எம் சென்னரெட்டி என்ற விவசாயத் துறை அமைச்சர் ஆகிய இருவரும் நம்பிக்கை தெரிவித்திருக்கின்றனர்.

'தெலிங்கானு ஆந்திராவுடன் இணையக்கூடாது' என்று கூறும் இயக்கத்திற்குத் தலைமை தாங்கும் இவர்கள் இருவரும், காங்கிரஸ் மேலிடத்தாரைச் சந்தித்து உரையாடித் திரும்பியதும், 'தெலிங்கானு தனி மாநிலமாகவே இருக்க வேண்டும் — என்ற ஐதராபாத் மக்களின் கோரிக்கையை டெல்லி சரியாக உணர்ந்து கொண்டிருக்கிறது.' என்று குறிப்பிட்டிருக்கின்றனர்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம.ஏ. அவர்களால அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ,